# 2

## சபை:

# இதன் பயன்பாடு

## எக்லேசியா (சபை) என்ற வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது

1. **இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் எத்தனை முறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?** *115.*
2. **இந்த வார்த்தை எத்தனை முறை "சபை" என்று ஒருமையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?** *76.*
3. **இந்த வார்த்தை எத்தனை முறை "சபைகள்" என்று பன்மையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?** *36.*
4. **இந்த வார்த்தை எத்தனை முறை "கூட்டம்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?** *3.*
   *இவ்விடத்தில் இது ஒரு கும்பலையும் மற்றும் சட்டப்படியான கூட்டத்தையும் குறிப்பிடுகின்றது (அப். 19:32, 39, 41).*
5. **"சபை" என்ற வார்த்தையை இயேசு எத்தனை முறை பயன் படுத்தினார் (மத். 16:18; 18:17)?**
   **அப். 2:1ன் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு "சபை" என்ற வார்த்தை எத்தனை முறைகள் பயன்படுத்தப்பட்டது?**

## சபை எவ்வாறு நிலைத்திருக்கின்றது

1. **சபையின் நிலைத்திருத்தலுக்கு வழி நடத்தும் கருத்து என்ன?**
   *உள்ளூர்.*
   - அ. *உள்ளூர் சபை என்பதினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன? கண்காணிக்க மூப்பர்களும், ஊழியம் செய்ய உதவிக் காரர்களும், ஊழியத்திற்கு அதன் உறுப்பினர்களும், மற்றும் பிரசங்கிக்கப் பிரசங்கியார்களும் கொண்டுள்ளதாகவும், எந்த ஒரு உள்ளூர்ப் பகுதியிலும் இருப்பதாகவும் உள்ள தேவனு டைய ஊழியம் செய்யும் அலகு.*
   - ஆ. *புதிய ஏற்பாட்டில் கூறப்படும் பல உள்ளூர் சபைகளில் சிலவற்றைக் குறிப்பிடுக (அப். 8:1; ரோமர் 16:3-5; 1 கொரி. 1:2; 16:1, 19; 2 கொரி. 8:1; கலா. 1:2, 22; 1 தெச. 1:1; வெளி. 1:4).*
2. **இரட்சிக்கப்பட்டவர்களாய் எந்த மாகாணங்களில் இருந்தவர்கள் அப். 9:31ன் "சபை" என்ற வார்த்தையில் உள்ளடக்கப்பட்டார்கள்?**

அ. இந்த சபையானது "யூதேயா, கலிலேயா மற்றும் சமாரியாவில்" இருந்த உறுப்பினர்கள் எல்லாரையும் உள்ளடக்கியிருந்தது, ஆனால் இது ஒருக்காலும் ஒன்று கூடியதில்லை, இதற்கு மூப்பர்களோ அல்லது உதவிக்காரர்களோ இருந்ததில்லை.

ஆ. KJV வேதாகமம் அப். 9:31ல் (சபைகள்) என்ற பன்மை வார்த்தையைப் பயன்படுத்துகின்றது.

***3. மத். 16:18 மற்றும் எபே. 1:22ல் "சபை" என்ற வார்த்தை எதனைக் குறிப்பிடுகின்றது?***

*இது ஒட்டு மொத்தமான சபையை, உலகளாவிய சபையை, இரட்சிக்கப்பட்ட யாவரையும் உள்ளடக்கி சபையைக் குறிப்பிடுகின்றது. உலகளாவிய சபைக்கு மூப்பர்களோ அல்லது உதவிக்காரர்களோ இருந்ததில்லை மற்றும் அது ஆராதனைக்கென்று ஒருக்காலும் ஒன்று கூடியதில்லை.*

## சபையின் பொருட்கருத்து

***1. "புறஜாதியாரில் உண்டான சபை" என்பது எதை அர்த்தப்படுத்தியது (ரோமர் 16:4)?***

*கலா. 1:22ல் பயன்படுத்தப்படும் திருப்பப்பட்ட கருத்து என்ன?*

***2. "லவோதிக்கேயாவின் சபை" என்பதினால் தரப்படும் கருத்து என்ன (கொலோ. 4:16)?***

***3. "தெசலோனிக்கேயர் சபை" என்பது அர்த்தப்படுத்துவது என்ன (1 தெச. 1:1)?***

***4. ஒவ்வொரு சபையும் யாரைக் கொண்டிருந்தது (1 கொரி. 14:33)? ஒவ்வொரு கிறிஸ்தவரும் பரிசுத்தவானாக உள்ளாரா (அப். 26:18; எபி. 12:14)?***

## சபையைப் பற்றி எவ்விதம் பேசுவது

***1. "சபை" என்ற வார்த்தை எவ்வித மாற்றுக் கருத்தும் இன்றி எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது?*** *62.*

***2. "சபைகள்" என்ற எளிய பெயர் எத்தனை முறை பயன்படுத்தப் பட்டுள்ளது?*** *29.*

***3. "தேவனுடைய சபை" என்ற சொல்விளக்கம் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது?*** *9.*

***4. "தேவனுடைய சபைகள்" என்ற சொற்றொடர் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது?*** *3.*

***5. கிறிஸ்து தம்மை சபையுடன் எவ்வாறு இணைவு படுத்துகின்றார் (மத். 16:18)?***

***6. சபையைப் பற்றிப் பவுல் எவ்வாறு பேசினார் (அப். 20:28)? (Revised Versionல் காணவும்)***

***7. எபி. 12:23ல் சபை எவ்வாறு குறிக்கப்படுகின்றது?***

***8. எல்லா சபைகளும் எவ்வாறு குறிப்பிடப்படலாம் (ரோமர் 16:16)?***

## கிறிஸ்துவும் சபையும் பிரிக்கப்பட முடியாதது

1. *சபையைக் கட்டியது யார் (மத். 16:18)?*
2. *சபையின் அஸ்திபாரம் யார் (மத். 16:18; 1 கொரி. 3:10, 11)?*
3. *இந்தக் கட்டிடத்தில் கிறிஸ்து நிரப்புகின்ற இடம் எது (எபே. 2:20)?*
4. *சபைக்கு என்னவாக இருக்கும்படி கிறிஸ்துவைத் தேவன் உயர்த்தினார் (எபே. 1:22)?*
5. *சபை என்றால் என்ன (எபே. 1:23)? யாருடைய நிறைவு சபையில் வெளியாக்கப்படுகின்றது (எபே. 1:23)?*
6. *சபை என்பது யாருடைய சரீரமாக உள்ளது (1 கொரி. 12:27; எபே. 1:23)?*
7. *சபை யாருக்குக் கீழ்ப்பட்டுள்ளது (எபே. 5:24)?*
8. *சபை யாருக்கு மணம் முடிக்கப்பட்டுள்ளது (எபே. 5:23, 25, 27, 32)?*
9. *சபை எதைக் கொண்டு கிரயம் கொள்ளப்பட்டது (அப். 20:28)?*
10. *சபைக்காகக் கிறிஸ்து அளித்த மகா மேன்மையான பலி எது (எபே. 5:27)?*
11. *சபையைச் சுத்திகரிப்பது யார் (எபே. 5:26)?*
12. *சபையில் முதல்வராயிருக்க வேண்டியவர் யார் (கொலோ. 1:18)? "கிறிஸ்துவின் சபை"யைப் பற்றி இவ்வளவு அடிக்கடி பேசுவது ஏன் (பிலி. 2:8-11)?*